RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2434

# சங்க இலக்கியங்களில் உழவுத் தொழில் பெண்கள்

ர. சதீஷ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, யுனிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருட்டிணகிரி - 635207, தமிழ்நாடு, இந்தியா.

# Agrarian Women in Sangam Literature

R. Sathish [a, *]

[a] Department of Tamil, Unique Arts &Science College, Krishnagiri-635207 Tamil Nadu, India

* Corresponding Author: sathishra@gmail.com

Received: 24-04-2024
Revised: 02-07-2024
Accepted: 09-07-2024
Published: 17-07-2024

## ABSTRACT

All living things act on the basis of some reason and work to fulfil their needs. Their movement can be divided on the basis of profession. Therefore, man also engages in work to fulfil his needs. Hence, later on this lays the seed for the foundation of the profession. The work they do becomes stable and then it is enough to do steady work. Man started to get civilized and grow in Mullai land, so it was Mullai land where he started to live a better life by doing business and enriching himself more and more. Nowadays there is no fixed career and careers are changed according to one's ability. Everyone is doing whatever profession they like. Careers are changing based on skills. No one has a stable career. People do many kinds of work such as ploughing, singing, drumming, spreading the message through drumming, fishing industry, net weaving, pipe making, making cart and so on. Here we can see in detail the benefits of farming and the fact that women are the major contributors.

**Keywords:** Sangam Literature, Women, Mullai, Farmer, Profession

## முன்னுரை

உயிரினங்கள் ஒவ்வென்றும் ஏதோ ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இயங்குகின்றன. எல்லா உயிரினமும் தம் தேவையை நிறைவேற்றிக் கொள்ளவே இயங்குகின்றன. அவற்றினுடைய இயக்கத்தைத் தொழில் அடிப்படையில் பிரிக்கலாம். ஒவ்வோர் உயிரினத்திற்கும் ஒவ்வொரு தொழில் என்ற வகையில் பிரிக்கப்படுகின்றது. ஆகவே, மனிதனும் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவே வேலைகளில் ஈடுபடுகின்றான். எனவே, பிற்காலத்தில் இதுவே தொழில் அடிப்படையில் அமைவதற்கு வித்தாகிறது. அவரவர் செய்யும் தொழிலே நிலையானதாக அமைந்துவிடுகிறது பின்பு இதுவே நிலையான தொழில் செய்ய ஏதுவாகின்றது.

மனிதன் நாகரிகம் பெற்று வளரத் தொடங்கியது முல்லை நிலத்திலேயே ஆகவே, தொழில்கள் செய்து தன்னை மேன்மேலும் வளப்படுத்திக் கொள்ளும் சிறப்பான வாழ்வை வாழத் தொடங்கிய இடம் முல்லை நிலமே.

தற்காலத்தில் நிலையான தொழில் என்பது இல்லை அவரவர் திறனுக்கு ஏற்ற வகையில் தொழில்கள் மாற்றப்படுகிறது. எல்லோரும் அவரவருக்கு விருப்பமான எல்லாத் தொழில்களையும் எல்லோரும் செய்கிறார்கள். திறமையின் அடிப்படையில் தொழில்கள் மாற்றம் பெறுகின்றன. யார்க்கும் நிலையான தொழில் என்பது கிடையாது.

உழவுத் தொழில் தண்ணுமை ஆக்கும் தொழில், தண்ணுமை முழக்கும் தொழில், பறை செய்தல், பறைமூலம் செய்தி பரப்புதல், மீன் பிடிதொழில், மீன் வலை பின்னுதல், குழல் செய்தல், குழலிசைத்தல், தேரோட்டும் தொழில், தேர்செய்யும் தொழில் இதுபோல மேலும் பல வகையாக தொழில் உள்ளது. இங்கு உழவுத் தொழிலின் பெறுமையையும் அதில் அதிகமாக பங்பெருபவர்கள் பெண்கேள என்பதனை இங்கு விரிவாக காணலாம்

## தொழிலால் பெயர்பெற்ற இனம்

துடி இசைத்தவர் - துடியர், பறை இசைத்து அரசக்கட்டளையை மக்கட்குத் தெரிவித்தவர் - பறையர், கடம்ப மரத்தைக் காவல் செய்தல் - கடம்பர், பண் இசைத்தவா் - பாணர் தொழில் அடிப்படையில் பல இனத்தவர் பெயர் பெற்றனர்.1

## உழவுத் தொழில்

உலக உயிரினங்கள் அனைத்தும் உழவனையே நம்பியுள்ளன. அதனால் தான் என்னவோ ஐயன் திருவள்ளுவர் உழவுக்காக ஒரு தனி இயலையே வகுத்து நமக்கெல்லாம் அறிவுறித்தியுள்ளார். உயிரினம் உயிர் வாழ உணவு என்பது அவசியம் தேவையானது. எல்லா உயிரினங்களுக்கும் பொதுவாகும். உயர்ந்தவர், தாழ்ந்தவர், பகைவர், நண்பர், இனம், மதம், மொழி, நாடு, உலகம், கன்டம், அண்டம் என அனைத்தையும் தாண்டியது. உயிரினங்கயுக்கான உணவுப் பசி என்பது பொதுவகும்.

“ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே

இரண்டு அறிவதுவே அதனொடு நாவே

மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே

நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே

ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே

ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே” (தொல். 1526)

தொல்காப்பியர் கூறும் ஓரறிவு முதல் ஆறு அறிவு படைத்த உயர் மாந்தர்கள், இயற்கையின் கடைசிப் படைப்பாகக் கருதப்படுகின்ற மனிதர்கள் வரை அனைவர்க்கும் பொதுவாகக் கருதப்படுவது உணவுத் தேவையே. மனிதனின் அடிப்படைத் தேவைகளாக கருதப்படுபவற்றில்கூட முதலிடத்தில் இருப்பது உணவு மட்டுமே.

உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இருப்பிடம் இவற்றில்கூட நாம் காண்பவை உணவு மட்டுமே மனிதனின் முதல் தேவையாகும். இதனை மட்டும் எந்த அறிஞரும் தத்துவவியல்வாதியும், அரசியல்வாதியும் மறுக்க முடியாத ஒன்று. உழவுத் தொழில் நம் நாட்டின் முதுகொலும்பு. இது நமக்கும் மட்டு மன்று உலக நாடுகளுக்கும் இதுவே உயிர்த் துடிப்பும் ஆகும். இது இல்லை எனில் எந்த உயிரினமும் எந்தப் பணியும் நடக்காது. ஆகவே திருவள்ளுவர்,

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்” (குறள். 1033)

உழவுத் தொழில் செய்து வாழக்கூடிய மாண்பை பெற்ற உழவர் பெருமக்கள் இன்று மட்டும் அல்ல என்றும் வாழக் கூடியவர்கள். உழவையே முதன்மை தொழிலாக கொண்டு இந்தியா போன்ற வளர்கின்ற நாடுகளின் அதிகமாக இருப்பவர்கள் உழவு செய்யும் பெருங்குடிமக்களே, இவர்கள் உழவு செய்ய மாட்டோம் என்றால் உலகம் இயங்காது எந்த விஞ்ஞானத்தாலும்

அறிஞர்களாலும் உணவுக்கான அரிசியையோ, கோதுமையையோ, சிறுதானியத்தையோ உருவாக்கிட முடியாதது.

எனவே உழுதுண்டு வாழ்பவர்களே வாழ்பவராகத் திருவள்ளுவர் அறிவுறுத்துகிறார் மற்ற எல்லோரும் உழவனை நோக்கித் தொழுதுகொண்டு பின்தொடர வேண்டும் என்கினறார். இறைவனுடைய எல்லாத் தொழில்களையும் உழவன் செய்கின்றான். ஆக்கல் காத்தல் அழித்தல் போன்றவற்றை உழவனும் பயிரை உருவாக்கி மழை புயல் இயற்கைச் சீற்றத்தில் இருந்து அழியாமல் காத்து நிற்கின்றான். நன்றாக விளைந்து முடிந்த பின்பு அறுவடை செய்கின்றான். ஆகவே உழவனையே இறைவனாகக் கருதலாம்.

“எல்லாத் தொழில்களையும்விட இந்த உழவுத் தொழிலே தலையானது.

சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்

உழந்தும் உழவே தலை” (குறள். 1031)

என்ற பாடல் அடிகளின் வழித் தெளியலாம். இவ்வாறாகப் பல எடுத்துக்காட்டுகள் கொடுத்து கொண்டே செல்லலாம்.

விலங்கைப்போல அலைந்து திரிந்த மனிதன் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி வாழத் தொடங்கினான். அப்போது நிலத்தைப் பண்படுத்தினான். உழுது பயிரிட்டான். விளைச்சலை அறுவடை செய்தான். நல்லுணவைச் சாப்பிட்டான். அதற்கு நெருப்புத் துணை புரிந்தது. பழந்தமிழன் மேற்சொன்ன முறையில் தான், உழவனாய் மாறினான், அவன் ஒருவகை மூங்கிலில் நெல் போன்ற விதையைக் கண்டான். அதைப் பிரித்தெடுத்தான். அதை விதையாக மாற்றினான். பலமுறை விதைத்து அதைப் பண்படுத்தினான். அதிலிருந்து நன்செய் (நஞ்சை) பயிர்க்குரிய நெல்லை உருவாக்கினான். உழவியல் துறை பிறந்தது. நெல்லை முதலில் கண்டறிந்து விளைவித்தவன் தமிழனே. அவனே ஆதிநாளில் பயிரிடும் முறையைக் கண்டவன். இன்று பொன்னி, கருணா முதலிய புதுவகை நெல் இனங்கள் அறிவியலின் தமிழகத்தில் 60 வகை நெல்லினங்கள் இருந்தன. தமிழனின் நெல் உலகின் பல பகுதிகளிலும் பரவியது. கோதுமை தோன்றுவதற்கு முன்பு நெல்லின் ஆட்சியே கொடி கட்டிப் பறந்தது. நெல் அரிசி உணவை உண்போரின் எண்ணிக்கைதான் இன்றும் உலக அளவில் முதலிடத்தில் உள்ளது.2

வயலில் நெல்விதைத்து விளைவித்தனர். நெல்லைத் தின்ன வரும் பறவைகளைத் தண்ணுமை முழக்கி விரட்டினர். இதனை,

“வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை

பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்” (அகம். 204:10-11)

என்ற பாடலடி வழியாக அறியலாம்.

“வானின் றுலகம் வழங்கி வருதலாற்

றானமிழ்தமென் றுணரற் பாற்று” (குறள். 11)

வானமாகிய மேகம் தவறாமல் மழையைத் தந்தனால்தான் உழவர் தினை விதைத்ததை,

“நீலத்து அன்ன நீர்பொதி கருவின்

மாவிசும்பு அதிர முழங்கி ஆலியின்

நிலம் தண்ணென்று கானம் குழைப்ப

இனம்தேர் உழவர் இன்குரல் இயம்ப” (அகம். 314:1-4)

என்ற அடிகள் உறுதியாக்கும்.

## உழவுத் தொழிலில் பெண்கள்

தந்தை, உடன் பிறந்தான், தாய், மகள் எனும் நால்வரும் பொருளாதர உற்பத்திக்கான உழைப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். முல்லை நிலப் பகுதியில் வேளாண் பொருளாதாரம் வளர்ந்ததில் இவர்களுடைய பங்கு அதிகம்3

பெரும்பாண்மையாக கடினமான வேலையாக இருப்பதால் உடல் உழைப்பில் ஈடுபடக்கூடியவர் ஆண்கள் அவருக்கு உறுதுணையாக இருப்பதும் மற்றும் இதர வேலைகளில் அதிக பங்கு பெற கூடியவர்கள் பெண்களே.

நாற்றங்காளில் நாற்றை விடுவது மட்டும் ஆண் அதனை இடமாற்றம் செய்வது பெண்களே ஆவார் நாற்றங்காளிலே இருந்தால் எந்த பயனும் இல்லை அதனை பிடுங்கி சேற்றில் நட்டால்தான் அதிக விளைச்சலுடன் விளையும் இதுவே முறையும் கூட.

சங்கக்கால வேளாண்மை நுட்பத்தில் களையெதடுத்தல் முக்கியப் பதிவாக உள்ளது. களையாக முளைத்தவற்றைத் துளர் என்ற கருவி கொண்டு உழவர்கள்களை எடுத்துள்ளார்கள்.4

இதுமட்டுமா பயிற்களுக்கு இடைஇடையே கலை எடுப்பது பாதுகாப்பது தகுந்த காலத்திற்கு மருந்து இடுவது பயிர்களை பாதுக்காப்பு என்பது மற்ற உயிர்களிடத்தில் இருந்து பாதுகாத்து விளைந்த பயிறைப் பின்பு அறுவடை செய்வதிலும் முக்கிய பங்கு பெண்களையே சாறும். இவர்களே நெற்கதிர்த முற்றியதும் அதனை அறுத்து எடுத்து அறுவடை முறையில் அதிகமாக பங்கு உள்ளது.

நெல்மணிகளில் உள்ள தூசு, கல், மண்,குறுனை என அனைத்தில் இருந்தும் தகுந்த முறையில் சல்லடை போட்டு, புடைத்தும், சலித்தும், பிரித்து பாதுகாப்பது இது போன்ற வேலைகள் அனைத்துக்கும் உரியவர்கள் பெண்களே.

உழவுத் தொழில் ஒரு கூட்டுத் தொழில் என்பதால், இத்தொழிலில் பெண்களுக்கும் சிறப்பான இடம் உண்டு. ஆண்களைக் காட்டிலும் பெண்கள் இரட்டிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றனர். 1. குடும்ப வேலை, 2. உழவு வேலை. பெண்கள் இருவேலைக் கோட்பாட்டால் மிகுந்த சிரமத்திற்காளாகிறார்கள். பெண்கள் நாற்று நடுதல், களைப்பறித்தல் போன்ற முக்கியத் தொழிலில் ஈடுபடுகின்றனர். மேலும் கிளி போன்ற உயிரினங்களை ஓட்டும் பயிர்க்காவல் தொழிலில் ஈடுபடுவதைச் சங்க நூல்கள் கூறுகின்றன.5

ஆழமாகப் பல முறை உழைப்பட்ட உழப்பட்ட நன்செய் நிலத்தில் மிகுதியான நீரைப்பாய்ச்சி சேறாக்கி அதில் நடவினைப் அழுத்திப் பெண்கள் நடுகின்றனர், இதனை

“நீருறு செறுவில் நாறுமுடி யழுத்தநின்

அடுந ரோடு நீ சேறி யாயின்வண்” (நற்றி.60:7-8)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். நன்றாக ஏர் உழுது, நீர்ப்பாய்ச்சி ஆழமாக நாற்றை நடுவதால் அந்நாற்றின் வேர்கள் அழமாக சேற்றில் பதிந்து விளைச்சல் பெருக வழிவகை ஏற்படுகிறது. இன்றைய நிலையிலும் ஆழ உழாத நிலங்களில் வேலைச் செய்யும் பெண்கள், உழவர்களிடம், ஆழமாக உழாததால் கை வலிப்பதாகவும், நாற்று ஆழப் பதியாததையும் சுட்டிக்காட்டுவதைக் காணமுடிகிறது.

உணவு முறைகளில் சங்க இலக்கியப் பாடல்களில் புன்செய் வேளாண்மை பற்றிய குறிப்புகளே பெருமளவு காணப்படுகின்றன. அதிலும் தினை பற்றிய பல்வேறு செய்திகள் பல பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தினை என்னும் பயிர்வகை குறிஞ்சி நிலத்தின் சிறந்த விளைபொருளாகும். தினையின் வகைகளாகச் சிறுதினை செந்தினை ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.5

## முடிவுரை

**சங்க காலம் தொட்டு இன்று வரையிலும் பெண்களின் பங்களிப்பு என்பது மிக முக்கியமானதாக உள்ளது. அடக்கு முறை காலமாக இருந்தாலும் சரி, ஆணுக்கு பெண் சமமில்லை என்றாலும் சரி மனித உயிர்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாமை உணவு என்பதனை அறிமுக உரையில் கூறினேன். பெண்களுக்கான பலம் என்பது இரட்டிப்பானது உழவு தொழில் மட்டுமல்ல அவர்களின் பங்கு வீட்டு வேலையும் தான் அதனை யாரும் மறுக்க இயலாது. இன்றைய சூழ்நிலையில் உழவுக்கு பல இயந்திரங்கள் வந்தாலும் அவர்கள் நிர்வாகத்தில் தான் உழவன் மேன்மை பெற்று இன்றும் சிறப்பாக வாழ்கிறான். நம் நாட்டின் முதுகெலும்பாக உள்ள உழவை காப்போம், பெண்களை பாதுகாப்போம் போற்றுவோம், உழவு தொழில் செய்பவர்கள் அனைவரையும் வாழ்த்துவோம்.**

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License